**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.2644/ஆ5/ 2023, நாள்: 09.08.2023**

*****

**பொருள்:** போதைப்பொருள் ஒழிப்பு (Drug Abuse) – அனைத்து வகை உயர்/ மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் 11.08.2023 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு போதைப்பொருள் ஒழிப்பு சார்ந்த உறுதிமொழி எடுத்தல் – தொடர்பாக

**பார்வை :**

1. அரசுச் செயலாளர் அவர்களின் கடித எண் . 10098/GL 1(2)/2023–1 நாள் 08.08.2023 .
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடித ந .க.எண்.00185/எம்/இ1/2023, நாள். 09.08.2023

*****

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துவ கை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்/ தாளாளர்கள்/ முதல்வர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

11.08.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை போதைப்பொருள் ஒழிப்பு சம்மந்தமாக அனைத்து அரசு /நிதியுதவி பெறும் உயர்/ மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளிலும் அவரவர் பள்ளி வளாகத்தில் தலைமையாசிரியர்கள் , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் போதைப்பொருள் ஒழிப்பு சார்பான உறுதிமொழி எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, மேற்கூறிய அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி இ ணைப்பில் கண்டுள்ளவாறு 11.08.2023 அன்று முற்பகல் 10.00 மணிக்கு உறுதிமொழி எடுக்க அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. உறுதிமொழி எடுத்த புகைப்படங்கள் தலைமையாசிரியர்கள் Whatsapp Group –ல் உடனுக்குடன் பதிவிடுமாறும் மேலும் , இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பள்ளிவகை வாரியாக பூர்த்தி செய்து இவ்வலுவலக ஆ5 பிரிவில் 11.08.2023 அன்றே பிற்பகல் 12.00 மணிக்குள் தனிநபர் மூலம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது மேலும் இவ்வலுவலக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள Google Link –இல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உறுதிமொழி எடுத்த எண்ணிக்கை விவரத்தினை அன்றே உள்ளீடு செய்ய அனைத்து வகை உயர் /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

https://enforcementbureautn.org/pledge என்ற இணைய இணைப்பினை பயன்படுத்தி மின்னணு உறுதிமொழி ஏற்க வசதி செய்யப்பட்டுள்ளது . இதனை பயன்படுத்தி மாணவர்கள உறுதிமொழி ஏற்பதுடன் உறுதிமொழி ஏற்றமைக்கான மின்னணு சா ன்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் . இத்தகவலை அனைத்து மாணவர்களுக்கும் தெரிவித்து மின்னணு உறுதிமொழி ஏற்க ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு-

1. பார்வைக் கடிதம், ,
2. உறுதிமொழி-ஒளி நகல் (தமிழ் (ம) ஆங்கிலம்,
3. உறுதிமொழி படிவம் (பள்ளி வகை வாரியாக)
4. மின்னணு உறுதிமொழி இணையபக்க – நகல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

.

பெறுநர்
அனைத்துவகை உயர்/மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் (ம)
மெட்ரிக் பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்-

1. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
3. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்,(இடைநிலை /தனியார்பள்ளிகள் )
(தங்கள் கட்டுபாட்டில் இயங்கும் பள்ளிகளுக்கு இவ்வலுவலக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆன்லைன் Google Link –இல் உள்ளீடு செய்ய அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது).